## 26.05.2020 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் மன்றப்பொருள்

### மன்றப்பொருள்814–26/5/2020

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு 2020–2021ம் ஆண்டிற்கு தேவையான தளவாடசாமான்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.6.00 (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. பொதுசுகாதாரப்பிரிவிற்கு தேவையான தளவாட சாமான்கள் வாங்கவும்,அதற்கான உத்தேச செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1228/2020/எச்1

### மன்றப்பொருள்815–26/5/2020

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் தனியார் மூலம் 125 துப்புரவு பணியாளர்களை கொண்டு பொதுசுகாதார பணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.K.Dis. No.28369-2018-J3 Date.04/12/2018ன் படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு மூன்றாண்டுகளுக்கு பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் படி 19.03.2020 ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் ஆணையாளர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் விபரம். |
|---|---|
| 1. | SUN TAMILNADU SECURITY MANAGEMENT SERVICE PVT LTD.POLT 3 STATE BANK OFFICER 2 COLONY RAM NAGAR , MADURAI 625 016. |
| 2. | PON RAMAR, LABOUR CONTRACTOR,159 MELA ANNA THOPPU M.S.C.4$^{TH}$ STREET MADURAI |
| 3. | M/S.J.J.INFO TECH, NO 25 ZION COMPLEX, OLD KUYAVAR PALAYAM ROAD MADURI |
| 4 | ARCTIC, 4A INTUC NAGAR, RAJAPALAYAM |
| 5. | EXSERNET, MADURAI |
| 6. | AVM SERVICE POINT RAJAPALAYAM |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் வரிசை எண்கள் 1,2,3 மற்றும் 4 ஆகிய நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப அடிப்படையில் தொழில்நுட்ப தகுதியில்லாதால் ஒப்பந்தப்புள்ளிகள் என்ற காரணத்தினால் நிராகரிக்கப்படுகிறது. வரிசை எண். 5,6 ஆகிய நிறுவனத்தில் ஒப்பந்தப்புள்ளி தகுதியுடையவைகளாக உள்ளது.

எனவே தொழில்நுட்ப தகுதியுள்ள நிறுவனத்தின் (FINANCIAL BID) 06.05.2020 அன்று திறக்கப்பட்டதில் கீழ்க்கண்ட நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை கீழ்க்கண்டவாறு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | **ஒரு ஆண்டிற்கான செலவு தொகை** |
|---|---|---|
| 1. | EXSERNET, MADURAI | ரூ.2,08,03,175 |
| 2. | AVM SERVICE POINT RAJAPALAYAM | ரூ. 2,06,22,500 |

அ.கு. 1. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் கண்டுள்ள AVM SERVICE POINT RAJAPALAYAM என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை குறைவாக உ;ள்ளதால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம்.

2. மேற்படி பணியினை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.K.Dis. No.28369-2018-J3 Date.04/12/2018ன் படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணிஉத்திரவு வழங்கிய தேதியிலிருந்து மூன்றாண்டுகளுக்கு பணிகள் மேற்கொள்ளவும் , அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. ஒப்பந்த காலம் ஓராண்டு முடிந்த பின்பு அந்தந்த நிதியாண்டில் துப்புரவு பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதியத்தின் அடிப்படையில் வழங்கவும், நிர்வாக செலவினம் 10 சதவீதத்திற்கு மிகாமல் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2047/2018/எச்1

**மன்றப்பொருள்816–26/5/2020**

தென்காசி நகராட்சியின் 2019–2020 முடிவுற்ற நிர்வாக அறிக்கை தயாரிக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு. பதிவு செய்யலாம்.

**மன்றப்பொருள்817/26/5/2020**

தென்காசி நகராட்சியில் ஆணையர் பதவியானது 15.11.2019 முதல் காலியாக இருந்ததனை தொடர்ந்து நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 684/2018/சி1 நாள்.25.11.2019ன் படி இந்நகராட்சி பொறியாளர் திருமதி. கே.எஸ் ஹசீனா அவர்களுக்கு கூடுதல் முழுபொறுப்பு வழங்கி ஆணையிடப்பட்டது. மேற்படி நாளில் இருந்து கூடுதல் பொறுப்பு வகித்து வரும் அன்னாருக்கு விதிமுறைகளின்படி கூடுதல் ஊதியம் வழங்க கோரியுள்ளதனை தொடர்ந்து டிசம்பர் 1 முதல் ஏப்ரல் 30 வரையிலான 5 மாத காலத்திற்கு கூடுதல் ஊதியம் கணக்கிட்டு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,

அ.கு மன்றம் அனுமதிக்கலாம்.

மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**மன்றப்பொருள்818–26/5/2020**

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான வாய்க்கால்பாலத்தில் உள்ள பம்பு ரூம்மில் கேஸ்சிலிண்டர் பொருத்தப்பட்டுள்ள கிருமி நாசினி சுரங்கப்பாதையில் உள்ள தெளிப்பான் பழுதடைந்த காரணத்தினால் சரியான விகதத்தில் கிருமிநாசினி குடிநீர் விநியோகம் சேர்க்க இயலவில்லை. தற்போது உள்ள கொரோனா வைரஸ் கிருமி பரவல் காரணமாக மேற்படி தெளிப்பான் 9 எண்ணம் மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ31000/-கும், மேற்படி குடிநீர் அவசர அவசியம் கருதி ஏற்கனவே சப்ளை செய்த சங்கரன்கோவில், எக்சலண்ட் கேஸ் குளோரின் என்ற நிறுவனம் 9 எண்ணம் தெளிப்பான் சப்ளை செய்து பொருத்திதர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு
1 மேற்படி செலவுத் தொகை ரூ31000/-யை மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று சங்கரன்கோவில், எக்சலண்ட் கேஸ் குளோரின் என்ற நிறுவனம் மூலம் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 819/26/5/2020**

இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டேங்கர் வாகனம் தகுதிசான்று பெறவேண்டியிருப்பதால் மேற்படி வாகனத்தின் பழுதினை சரிசெய்ய தென்காசி மூஸா ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் வரும் வரை இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு பொதுமக்கள் நலன் கருதி தனியார் குடிநீர் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய தயார் செய்யப்பட்ட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ2.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு
1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள்820/26/5/2020**

இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களுக்கு புதியதாக ஒரு கணிணி, லேசர் பிரிண்டர் மற்றும் இந்நகராட்சியில் உள்ள 15 கணிணிக்கு Anti Virus Software பதிவிறக்கம் செய்யவும் லேசர் பிரிண்டர் 11 எண்ணங்கள் மற்றும் ஒரு Dot Matrix பழுதான பிரிண்டருக்கு உதிரி பாகங்கள் மாற்றவும் மற்றும் கணிணி பிரிவிற்கு புதியதாக நெட்வொர்க் சுவிட்ச் பொருத்துவதற்கு இந்நகர்மன் தீர்மான எண்: நாள்: ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு 20.05.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | மெகா சிஸ்டம்ஸ்<br>116E PSS பிளாசா<br>இரயில்வே பீடர் ரோடு, தென்காசி | 117100/- |
| 2 | முத்து கம்ப்யூட்டர்ஸ்<br>145/4 ஸ்ரீகாவேரி டவர்ஸ்<br>தெற்கு மாசி வீதி, தென்காசி. | 118950/- |

அ.கு வரிசை எண் 1ல் கண்ட தென்காசி, மெகா சிஸ்டம்ஸ் என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்

தென்காசி

நகராட்சி

26.05.2020 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்

| வ.எண். | மன்றப்பொருள் எண். | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| | | | |
| 1 | 1 | 814 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 815 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 816 | அ.கு. அனுமதிக்கப்பட்டது./பதிவு செய்யலாம் |
| 4 | 4 | 817 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 818 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 819 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 820 | அ.கு. அனுமதிக்கப்பட்டது. |

(ஓம்) க.செ. ஹசீனா

தனி அதிகாரி

தென்காசி நகர்மன்றம்

உண்மை நகல் உத்திரவின் படி

மேலாளர்

தென்காசி நகராட்சி